சங்க இலக்கியங்களில் மரங்களும் சூழலியலும்

ஆய்வாளர் நெ. பெமிலா ராணி
முழுநேர ஆய்வு மாணவி, பதிவு எண்: 2421309012001
தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

நெறியாளர் முனைவர். ஜா லிலி ஏதேஷ்
உதவிப் பேராசிரியர், முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு
DOI: https://doi.org/10.5281/zenodo.19220461

முன்னுரை

நமக்கு கிடைத்த சங்க இலக்கிய பிரதிக்குள் இயற்கையை சார்ந்தும் இயற்கையைப் பார்த்து போல செய்துமான திணை சார்ந்த சூழலியல் வாழ்க்கை அமைந்திருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இயற்கையோடு இரண்டற கலந்த வாழ்வு முதல், உரி, கருப்பொருள்களாகவருவதைபார்க்கலாம். அந்த வகையில் இந்த கட்டுரை சங்க இலக்கிய பிரதிக்குள் மரங்கள் குறித்து பேசுகிறது.

பனை (நுங்கு) பற்றிய பதிவுகள்

சேர மன்னர்கள் பயன்படுத்தியபூ பனைமரத்திலுள்ளப் பூ. பனையைப் "போந்தை", "பெண்ணை" எனச் சங்க நூல்கள் கூறுகின்றன. பனையை மரமன்று அது புல்லெனவும் புறக்காழ் கொண்டது எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இதனை,

புறக் காழனவே புல்லெனப் படுமே
(தொல். பொருள். 1585)

என்ற நூற்பா வரி புலப்படுத்துகின்றது. பனையில் ஆண்பனை, பெண்பனை என இருவகை உண்டு. இவ் இரு வகைகளில் பெண்பனை மரமே பெரிதும் பயன்படுகிறது.

பெண் பனைமரத்தில் இருந்து "பதநீர்" எடுப்பர். இதனைக் காய்ச்சிப் பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலானவற்றைத் எல்லாம் தயாரிப்பார்கள். பனையில் பஞ்சு போன்ற நுங்கு இருப்பதைக் குறுந்தொகை,

பனை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஒங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
(குறுந். 293:2-3)

என்றுசுட்டுகிறது.பனையின்பூக்கள்மஞ்சள் கலந்தவெண்ணிறங்கொண்டவை.ஆனால், இம்மலர் சூடிக்கொள்ளும் வாய்ப்பற்றவை. எனினும் பனையின் வெள்ளிய இளங்குருத்து ஓலையைப் பிளந்து அதன் வலப்பக்கத்துப் பாதியைக் சின்னமாக சேரர்கள் சூடிக் கொண்டனர். சேர அரசர்களுக்குரிய சின்னமாகவும் மாலையாகவும் பனை விளங்குவதை,

தொன்னிலை மரபினன் முன்னோர் போல
ஈகையங் கழற்கா லிரும்பனம் புடைய
(புறம். 99)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

இப்பனங்குருத்து மலரமைப்போ, மணமோ அற்றது என்பதைக் கபிலர் உணர்ந்தாலும் இவற்றைக் கண்ணிப்பு நிலையில் போந்தையாகவும் தார்ப்பு நிலையில் புடையலாகவும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பனை மரங்கள் பொதுவாகப் பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலே தானாகவே வளர்ந்து பெருகுகின்றன. இளம் பனைகள் "வடலி" என்று அழைக்கப்படுகிறது. பனை வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு 15 ஆண்டுகள் வரை

எடுக்கும் எனக் கூறப்படுகிறது. அதன் வயது மனிதனின் சராசரி வயதிலும் அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

பனைகள் குறிப்பிடத்தக்க வளைவுகள் ஏதுமின்றிச் சுமார் 30 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியவை. கிளைகளும் கிடையாது. இதன் உச்சியில் கிட்டதட்ட 30-40 வரையான விசிறி வடிவ ஓலைகள் வட்டமாக அமைந்திருக்கும்.

அத்தி மரம் பற்றிய பதிவுகள்

குறிஞ்சிப் பாட்டு என்ற நூல் அத்தி மரத்தைச் சிறுமரம் என்று பதிவு செய்கிறது. இதனை,

அடும்பமர் ஆத்தி (குறிஞ்சி. 87)

என்ற அடி புலப்படுத்துகிறது. அத்தி சோழர் குலத்தின் அடையாளப் புவாகும். அத்திமலர் "ஆர்" என்றும் கூறப்படுவதை,

வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும்

(புறம். 338: 6-8)

என்றபுறப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இம்மரத்தின் நாரிலிருந்து மாலைகள் தொடுக்கப்படுகின்றன. இம்மரம் கோயில்களில் வளர்க்கப்படுகிறது. வெளிர் மஞ்சள் நிறமுடைய இப்புவானது ஐந்தடுக்குகளைக் கொண்டது. குறுந்தொகை,

கருங்கால் வேம்பின் ஒண்பு யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிர் மிதித்த ஒருபழம் போல

(குறுந். 24: 1-4)

எனும் பாடலடிகளில் "பெரிய காலையுடைய வேம்பினது ஒள்ளிய பூக்களின் புதுவருவாயை உடைய இளவேனிற்காலம், எனது தலைவனை இன்றியே கழிந்திடுமோ, ஆற்றங்கரையில் வளர்ந்தோங்கிய வெள்ளிய கிளைகளையுடைய அத்தி மரத்தினின்று விழுந்த பழத்தை ஏழு நண்டுகள் காலால் மிதித்துச் சிதைத்ததுசுசு எனச் சுட்டுகின்றது. அத்தி மரவகையைச்சேர்ந்தது. நாட்டு அத்தி, வெள்ளை அத்தி, நல்ல அத்தி எனப் பல வகை உண்டு. அத்தி மரங்கள் அளவான உயரமுடைய நடுத்தர மரமாகும். இம்மரம் சுமார் 10 மீட்டர் வரை உயரமாக வளர்கிறது. அத்திப்பழத்தை ஆராய்ச்சி செய்த அறிவியலாளர்கள் இதில் புரோட்டின், சர்க்கரை, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து அதிக அளவில் இருப்பதாகவும் மற்ற பழங்களை விட அத்திப்பழத்தில் இந்தச் சத்துக்கள் நான்கு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வில் கூறியுள்ளனர். இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொன்றை மரம் பற்றிய பதிவுகள்

முல்லைநிலத்துமரமானகொன்றையைக் குறிஞ்சிப்பாட்டில் கபிலர்,

தூங்கிணார்க் கொன்றை (குறிஞ்சி. 86)

என்று குறிப்பிடுகிறார். இதற்குச் "சரக் கொன்றை" என்றும் "கடுக்கை" என்றும் பெயர்கள் உண்டு. கார்காலத்தில் கொன்றை மலர்கள் புக்கத் தொடங்கும். இம்மலர்கள் பொன் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இம்மலர்கள் நீண்ட கொத்தாகப் புக்கும் இயல்புடையவை. புத்த நிலையில் இம்மரம் மிக அழகாகக் காட்சியளிக்கும். பூக்கள் மரத்தில் கீழ்நோக்கித் தொங்கி கொண்டிருக்கும். கார்காலம் வந்துவிட்டாலே கொன்றை மலர்கள் மாலைபோல் கொத்துக் கொத்தாகப் புத்து நிற்கும் என்பதை,

கதுப்பிற் றேன்றும் புதுப்புங் கொன்றை
கானங் காரெனக் கூறினும்

(குறுந். 21: 3-4)

என்ற அடிகள் காட்டுகின்றன. மேலும், கொன்றை மலர் சிவபெருமானுக்குரிய மலராகும். சிவனுக்குரிய பூக்களில் கொன்றையே முதலிடம் பெறுகிறது. சங்க இலக்கியங்களில் சிவபெருமானை வாழ்த்தும் பாடல்களில் எல்லாம் சிவன்

கொன்றை மலரைக் கண்ணியாகவும், தாராகவும், மாலையாகவும் சூடியிருப்பதாகவே கூறப்படுகிறது. சிவனைக் "கொன்றை வேய்ந்தான்" என்பர். இதனை,

காவிரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
(அகம்: 1: 1-2)

என்றுஅகநானூறு குறிப்பிடுகின்றது.

"சங்க இலக்கியங்களில் சிவபெருமானை வாழ்த்தும் பாடல்களிலெல்லாம் கொன்றை காட்டப்படுகின்றது. கொன்றையின்மதிப்பு சிவபெருமானின் மதிப்பாகவே அடியார்களால் கருதப்பட்டது"[1] எனக் கோவை இளஞ்சேரன் குறிப்பிடுகின்றார்.

கொன்றை அல்லது சரக்கொன்றை "பேபேசியே" என்னும் தாவரவியற் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புக்கும் தாவரம் ஆகும். இதன் தாயகம் இந்தியா ஆகும்.

இது இந்திய மாநிலமான கேரளாவின் மாநில மரமாகும். இது மலையாள மக்களிடையே முக்கியத்துவம் வாய்ந்த மலராக உள்ளது. அலங்காரத்திற்குரிய அழகு தாவரமாகவும் மருத்துவ குணம் வாய்ந்ததாகவும் உள்ளது. தாய்லாந்து நாட்டின் தேசியப் புவாகவும் மரமாகவும் திகழ்கிறது.

வேம்பு பற்றிய பதிவுகள்

வேப்பமரத்தின் பூ பாண்டிய மன்னர்களின் குடிப் புவாகும். பாண்டிய மன்னர் மட்டுமின்றி வீரர்களும் இப் பூக்களைச் சூடிக்கொள்வர். வீரர்கள் இன்ன அரச னைச் சார்ந்தவர்கள் என்று வேறுபாடு தெரிந்துகொள்ள அவரவர்களுக்குரிய பூக்களைச் சூடிக்கொண்டு ஆர்ப்பர். வேம்பு ஒரு பெரிய மரம். இதில் கருவேம்பு, நில வேம்பு, மலை வேம்பு, சருக்கரை வேம்பு எனப் பலவகைகள் உள்ளன. பொதுவாக வேம்பு என்பது கருவேம்பைக் குறிக்கும் என்பதை,

கருங்கால் வேம்பின் ஒண்பு யாணர்
(குறுந். 24:1)

என்ற பாடலடி குறிப்பிடுகிறது. வேப்பம்பு வெண்ணிறமானது. கொத்தாகப் புக்கும் இயல்பினது. இளவேனிற் காலத்தில் பூக்கும். நல்லதொரு மணம் உடையது. புத்தாண்டில் இப்பூவைச் சூடியும், வேப்பம் பூச்சாற்றினை உண்டும் மகிழ்வர்.

வேப்பிலை அம்மை நோயைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்தது. வேப்பமரம் கட்டிட வேலைக்குப் பயன்படும். இதன் விதையிலிருந்து எடுக்கப்படும் வேப்ப எண்ணெய் மருந்துக்குப் பயன்படும். நோய்களுக்கு மருந்தாகவும் பிள்ளைகளுக்குக் காவலாகவும் பயன்படும். வேப்பமரத்தின் இலையை மக்கள் தீ மிதிக்கும் பொழுது தங்கள் கைகளில் ஏந்திச் செல்லும் வழக்கம் தமிழகத்தில் உள்ளது.

இந்தியாவில்சாலையோரங்களில்அதிகம் காணப்படும் மரங்களில் இதுவும் ஒன்று இதனுடைய தண்டு மரப்பட்டை மிகவும் உழைக்கக் கூடியது. மரவேலைகள், விவசாயக் கருவிகள் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் இது பயன்படுகிறது. வேப்பம்புண்ணாக்கு, வேப்பம்பால் மிகவும் பயன் உள்ளவை. காய்ந்த இலைகளைத் துணிகளின் மீது வைத்தால் பூச்சிகள் போகும்.

நெல்லி மரம் பற்றிய பதிவுகள்

நெல்லி உயரமான இலையுதிர் மரம். இதன் காய்கள்சதைப்பற்றுடனும்உருண்டையாக ஆறு பிரிவாகப் பிரிந்தும் வெளிரிய பசுமை நிறத்திலோ மஞ்சளாகவோ காணப்படும். நெல்லியில் கருநெல்லி, அருநெல்லி என்ற இருவகை உண்டு. அரு நெல்லிக்காய் மரம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டு மரமாக வளரக்கூடியது. இம்மரம் நெல்லிக் காய்களைக் கோடைக்காலம் முழுவதும் தரக்கூடியது. நெல்லிமரம் 5 முதல் 6 மீட்டர் வரை வளரக் கூடியது.

நெல்லிமரம் மலைகளில் நன்றாக விளையும். மற்ற நிலங்களில் சுமாராக விளையும். கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் தனக்குக் கிடைத்த சாகாவரம்

தரும் நெல்லிக்கனியைத் தான் உண்பதை விட, ஔவையார் உட்கொண்டால் தமிழுக்கு மிக்க பயன் விளையும் என்று ஔவையாருக்குப் பரிசிலாகத் தந்தார்.

சுரத்தினிடை வளர்ந்த நெல்லியின் பசுங்காய்களை,
அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
(குறுந். 209:1-2)

எனும் பாடலடி பதிவு செய்கின்றது.

நெல்லிக்காய் உண்ணுவதால் உடலில் உள்ள கொழுப்புகள் கரைந்து உடல் எடையானது குறையும். நெல்லிக்காய்ச் சாற்றைக் குடித்தால் கண் பார்வை அதிகரிக்கும். நெல்லிக்காய்ச் சாறு உடலில் உள்ள டாக்ஸின்களை வெளியேற்றி முதுமைத் தோற்றத்தைக் குறைக்கும்.

"இயற்கை தந்துள்ள இனிய கனிகளில் நெல்லிக்கனியும் ஒன்றாகும். உடல் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத சத்துக்களான மாவுச்சத்து, புரதம், கொழுப்பு, கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து, செல்லுலோஸ் ஆகிய அனைத்தும் நெல்லியில் அடங்கியுள்ளன. நெல்லிக்காயை எப்படி பதப்படுத்தினாலும் அதிலிருந்து வைட்டமின் சி என்கிற உயிர்ச்சத்து அழியாதது இக்கனியின் சிறப்பு."[2]

புன்னைமரம் பற்றிய பதிவுகள்

"புன்னை கடற்கரையடுத்த நிலங்களில் வளரக்கூடியது. இதில் சுரபுன்னை அல்லது சிறுபுன்னை என்றொரு சிறு இனமும் உண்டு. இவ்விரண்டின் குணமும் ஒன்றே. இதன் எண்ணெயை ஆங்கிலத்தில் "டாம்பா ஆயில்" எனச் சொல்லுவார்கள்."[3] புன்னை என்பது அழகிய சிறுமரம்.

குறிஞ்சிப்பாட்டில்,

கடியிரும் புன்னை **(குறிஞ்சி. 93)**

என்று புன்னை மரத்தினைக் கபிலர் குறிப்பிடுகிறார். இம்மரம் காவல் மரமாகவும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

நெய்தல் நிலப்பாங்கான கடற்கரை ஓரத்தில் உப்பங்கழிக் கரையிலும் புன்னை மரம் மிகுதியாக வளரக் கூடியவை என்பர். இதன் வேர்கள் கடல் அலைகளால் அரிப்புண்டு புன்னை மரம் நிற்பதையும் இதன் கரிய கிளைகள் வளைந்து நிலத்தில் தோய்ந்து நிற்பதையும் குறுந்தொகை,

கரும்கோட்டுப் புன்னைப் பும்பொழில் புலம்ப
(குறுந். 123:3)

என்ற அடியிலும்

ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னை
(குறுந். 311:5)

எனும் அடியிலும் புலப்படுத்துகின்றது. "புன்னை மிகவும் அழகிய தோற்றம் கொண்ட மரங்களுள் ஒன்றாகும். இதன் இலைகள் சற்றுப் பெரியனவாகவும், பளபளப்பாகவும் கரும்பச்சை நிறத்துடனும் காணப்படும். இவை நீளவட்ட வடிவம் கொண்டவை. மேல்புறம் வழவழப்பும் பளபளப்பும் உடையன. கதிரொளியில் மின்னல் போலப் பளிச்சிடும் இதன் அரும்புகள் வெண்ணிறமானவை உருண்டை வடிவானவை. நிறத்தாலும் வடிவாலும் முத்தை ஒத்தவை. இம்மரங்கள் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளிலும் கிழக்கு ஆப்பிரிக்கக் கரையை அண்டிய தீவுகளிலும் காணப்படுகின்றன."[4]

மருத மரம் பற்றிய பதிவுகள்

மருதம் வயலும் வயலைச் சார்ந்த பகுதியைக் குறிக்கும். இப்புலத்தில் வளரும் மருதமரத்தை வைத்தே இந்நிலம் இப்பெயர் பெற்றது. மருதமரம் உயர்ந்து பருத்து வளரும். இம்மரம் காவிரி, வைகை முதலிய ஆறுகளின் கரைகளில் வளர்வதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மருதம் பூங்கொத்தாக புக்கும் தன்மையுடையவை. பறவைகள் பறக்கும் வேகத்திலேயே அவை உதிர்ந்து விடுவதை,

பழனப் பலபுள் இரியக் கழனி
வாங்கு சினை மருதத்துத் தூங்குதுணர் உதிரும்..
(நற். 350:2-3)

என்ற அடிகளும்,

வாரலெஞ் சேரி தார னின்றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்

பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
(குறுந். 258:1-3)

எனும் அடிகளும் சுட்டுகின்றன.

வேங்கைமரம் பற்றிய பதிவுகள்

மலைச் சாரல்களில் வேங்கை மலர் மிகுதியாக மலர்ந்திருக்கும். குறிஞ்சி நில மக்களின்வீட்டுமுற்றங்களில்பெரும்பாலும் வேங்கை வளர்ந்திருக்கும் என்பர். இப்பூக்கள் இம்மரத்தில் மஞ்சள் நிறத்தில், மாலை மாலையாகப் புத்து நிற்கும். இம்மரம் புத்த பொழுதில் வரிப்புலியை ஒத்த தோற்றம் அளிப்பதால் மகளிர் இதனைப் புலி புலி என்று ஆரவாரம் செய்து கூச்சலிடுவர். மேலும்,வேங்கைப் புவைப் புலி என்று கருதி யானைகள் அஞ்சி ஓடும் என்பதை,

ஓங்கல் மிசைய வேங்கை ஒள்விப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலின்
(அகம். 223)

என்ற அகப்பாடல் அடிகள் மொழியும். இதன் மலர் தேனும் தாதும் நிறைந்த மணம் பொருந்தியதாகும். இதனை "நறுவீ வேங்கை" எனவும் வழங்குவர். வேங்கை புத்து நிற்பதை நன்னிமித்தம் என்பர். எனவே தான் இதனை "நன்னாள் வேங்கை என்றும் "கனிவாய் வேங்கை" என்றும் அழைப்பர். வேங்கை மலரும் பருவம் கார்ப்பருவம். அதிலும் முழுநிலவுக் காலத்தில் பூக்கும் என்பர்.

"அரும்பின்றி முற்றுமலர்ந்த கரிய காலையுடைய வேங்கை மரத்தினது மேனோக்கியெழுந்த பெரிய கிளையினிடத்தே தங்கிய மயில் புக்கொய்யலுற்ற மகளிரைப் போலத் தோன்றும் மலைநாட்டுத் தலைவன்" என்று குறுந்தொகை குறிப்பிடுவதை,

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
(குறுந். 26:1-2)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. வேங்கை மரம் எனப்படுவது நடுத்தர அளவிற் பெரியதான இலையுதிர்த் தாவரம். இது 30 மீட்டர் உயரம் வளரக் கூடியது. வேங்கை மரத்தின் (வைரம், இலைகள், பூக்கள் உட்பட) பல்வேறு பகுதிகளும் நெடுங்காலமாக ஆயுர்வேத மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. வேங்கை மர வைரம் காயங்களை மூடவும் எரிவு மற்றும் நீரிழிவு போன்றவற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது. கணையத்திலிருந்து இன்சுலினை மீளச் சுரக்கச் செய்வதற்காகப் பயன்படும் ஒரேயொரு தாவரப் பொருள் வேங்கை மரப் பிசின் ஆகும்.

முடிவுரை

முதல், கரு, உரிப்பொருளென முறைபடுத்தப்பட்ட திணைசார் வாழ்வியலுக்குள் மரங்களின் பங்களிப்பு மிக முக்கியமான செயல்பாடாகும். ஆதி மனிதனின் செயல்பாடு சார்ந்த இருப்பிடம் மரங்கள் சூழ்ந்த காடே ஆகும். ஏன் குடியிருப்புகளுக்கு கூட மரத்தாலும் மரம் மூலம் கிடைத்தவைகளாலும் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு திணைசார் வாழ்வியலுக்குள் ஒவ்வொரு மரங்கள் முக்கியத்துவம் வாய்ந்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வகையில் சில மரங்களை பற்றிய பதிவுகள் இந்த கட்டுரையில் பேசப்படுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கோவை இளஞ்சேரன், இலக்கியம் ஒரு பூக்காடு, பக். 444
2. கே. என்.சண்முகம், மூலிகைக் கலைக் களஞ்சியம், பக். 610
3. கே. என்.சண்முகம், மூலிகைக் கலைக் களஞ்சியம், பக். 610
4. மேலது., பக் 705 5